## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 141 / 2024

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW4<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. vijayan |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 28th day of October, 2025.

**(A1 to A3 are present)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>முதல் விசாரணை</u>** :

நான் தற்போது சென்னை, அண்ணா நகரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நானும், மனிஷா, அரவிந்த், விக்னேஷ் அனைவரும் திருப்பாச்சூர் வெங்கடேஷ்வரா இன்ஜினியரிங் கல்லூரியில் ஒன்றாக 2015-2019 படித்தோம். கல்லூரிக்கு என்று ஒரு வாட்ஸ்அப் குரூப் இருந்தது. குரூப்பில் அனைவரும் நன்றாக நண்பர்களாக

பேசுவோம். 2019ல் தான் எனக்கு விக்னேஷும், மனிஷா மாலினியும் ஒருவரை ஒருவர் விரும்பு வருகிறார்கள் என்று எனக்கு தெரியும். கல்லூரி முடித்துவிட்டு நாங்கள் பணிக்கு சென்றுவிட்டோம். இருவரும் ஒன்றாக வெளியில் சென்றது, அம்மாவை பார்பதற்காக மனிஷாவை எதிரி அழைத்து சென்றது மனிஷா சொல்லி தான் எனக்கு தெரியும். மனிஷா விக்னேஷை திருமணம் செய்துகொள்கிறேன் என்று சொன்ன போது விக்னேஷ் அவரை வீட்டிற்கு அழைத்து சென்றபோது விக்னேஷின் தாயார் மனிஷாவை நீங்கள் எஸ்சி ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்று சொல்லி மனிஷா மிரட்டு அனுப்பினார் என்று மனிஷா என்னிடம் கூறினார். மனிஷா விக்னேஷ் சமாதானம் செய்வதாக கூறி பல முறை முந்திரி தோப்பில் முதலில் சந்தித்து விக்னேஷ் தப்பாக நடந்ததாக கூறினார். முந்திரி தோப்பு, ஏரிக்கரையில் இருவரும் சந்தித்தபோது விக்னேஷ் தப்பாக நடந்ததாக கூறினார். மேற்படி சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து மனிஷா மாலினி நடந்தது பற்றி என்னிடம் கூறினார். மனிஷா மாலினி திருவள்ளூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிரி மீது புகார் கொடுத்துள்ளார். புகார் கொடுக்கும்போது நானும், என்னுடைய நண்பர் அரவிந்த் சென்றோம். பின்னர் ஏ.சி. என்னை விசாரித்தார். சம்பவம் நடந்த முந்திரி தோப்பிற்கு சென்று சம்பவயிடத்தை பார்த்தோம். அப்போது என்னுடன் மனிஷா மாலினி மற்றும் அரவிந்த் இருந்தார். பின்னர் 1 வாரம் கழித்து ஊத்துக்கோட்டை டி.எஸ்.பி. என்னை விசாரித்தார். மறுபடியும் அதே முந்திரி தோப்பிற்கு அழைத்து சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டார்கள். சம்பவயிடத்தை பார்த்து குறித்துக்கொண்டு மாதிரி வரைபடம் வரைந்தார்கள். மகஜரில் நானும் அரவிந்த்-ம் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தை போலீசார் என் முன்னிலையில் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜிரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

முந்திரிதோப்பிற்கு எந்த தினத்தில் சென்றோம் என்றால் 10/07/2023 அன்று

ஏ.எஸ்.பி-யுடன் சென்றோம். மறுபடியும் 16/07/2023 அன்று டி.எஸ்.பி-யுடன் சென்றோம். முதலாவதாக காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டேன். மற்றொரு முறை சம்பவயிடத்தில் முந்திரி தோப்பில் வைத்து கையொப்பமிட்டேன். பார்வை மகஜிரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 16/07/2023 அன்று பார்வை மகஜிரில் கையொப்பமிட்டேன். ஆனால் பார்வை மகஜரில் தேதி 20/07/2023 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நானும், மனிஷா மாலினி மற்றும் அரவிந்த் இருந்தோம். டிஎஸ்பி மற்றும் காவலர்கள் இருந்தார்கள். போலீசார் சம்பவயிடத்தில் ஏதாவது எழுதிக் கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். அதில் ஏதாவது கையொப்பம் போட்டேனா என்றால் ஒரு வெள்ளை தாளில் எழுதிக்கொண்டதில் நான் கையொப்பமிடவில்லை. சம்பவயிடத்தில் போலீசார் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் சுமார் அரைமணி நேரத்திற்கு மேலாக இருந்தார்கள். சம்பவயிடம் முந்திரி தோப்பு எங்கிருக்கிறது என்றால் பெரியபாளையம் செல்லும் வழியில் உள்ளது. நான் காவல் நிலையத்திலிருந்து தான் சம்பவயிடத்திற்கு சென்றேன்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.